## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 108/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திரு. கோகுல்தாஸ் |
| Father/Husband's Name | : சுப்பிரமணியன் |
| Village | : நெ.16/305, செம்பரம்பாக்கம் |
| Taluk | : காரை தாலுக்கா, காஞ்சிபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2025.

A1, A2, A3 present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செம்பரம்பாக்கம் கிராமத்தில் வசித்து சீப் ரெயின் கிளர்க், ஜோலார்பேட்டையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2018 அன்று இரவு 10.28 மணியளவில் நான் காஞ்சிபுரம் இரயில்வே கேட் எல்சி 28 ல் பாயின்ட் மேனாக பணிபுரிந்து கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் 40711 இரயில் கிராசனதால் கேட் போட்டிருந்தேன். அன்றைய தினம் அம்பேத்கார் பிறந்த நாள். 4 லோக்கல் பசங்க கோனேரிகுப்பம் கிராமத்தை சேர்ந்தவர்கள் கேட்டிற்குள் வந்தார்கள். அந்த கேட் ரூம் பக்கத்தில் கேட்டை திறப்பதற்காக விங்ஸ் இருக்கும் அந்த விங்ஸை படியில் ஏறி தான் சுற்ற வேண்டும். அந்த நபர்கள் அந்த படியில் அமர்ந்து வழியை மறித்து கொண்டு மது அருந்தி கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் யாரும் அனுமதி கிடையாது. நான் மட்டும் தான் இரவு நேரத்தில் விளக்கை வைத்து கொண்டு இருப்பேன். அங்கு அமர்ந்து கொண்டிருந்தவர்களிடம் இங்கு அமர கூடாது வேறு இடத்திற்கு சென்று விடுங்கள் என்று கூறிய போது அவர்கள் செல்ல முடியாது இங்கே தான் மது

அருந்துவோம் என்று கூறினார்கள்.

பின்னர் நான் ஓரமாக ஒதுங்கி சென்று கேட்டை திறந்தவுடன் இரயில் சென்றுவிட்டது. பிறகு அவர்களிடம் சென்று இங்கு அமர கூடாது என்று கூறிய போது சேகர் என்பவர் எனது சட்டையை பிடித்து கிழித்து தெவிடியா பையா, ங்கோத்தா என்று அசிங்கமாக பேசி போக முடியாது என்று கூறி எனது தலையில் ஒரு குத்து குத்தினார். பரணி, கருப்பன் என்பவர்களும் எனது தோள் பட்டையில் ஒரு அடி அடித்தார்கள். அந்த பக்கமாக லோக்கல் போலிசார் கண்காணிப்பிற்காக வந்தார்கள். அவர்களிடம் நடந்த பிரச்சனையை கூறினேன். அவர் அந்த நபர்களிடம் இங்கு வரகூடாது என்று திட்டிவிடடு அவர்களை அனுப்பிவிட்டார். போலிசார் சென்றவுடன் மறுபடியும் வந்து கருப்பன் என்பவர் நீ என்ன பெரிய இவனா நாங்கள்ஆயிரத்தெட்டு லோக்கல் போலிசை பார்ப்போம் என்றும், மேலும் நீ கேஸ் கொடுத்து பார் உன்னை வெட்டி விடுவோம் என்று கூறினார். இதே வார்த்தையை சேகர் என்பவரும் சொன்னார். ஆஜர் எதிரிகள் தான் பரணி, சேகர், கருப்பன் ஆவார்கள் இன்னொரு நபர் யாரென்று எனக்கு தெரியவில்லை. எனக்கு அவர்கள் அடித்ததால் மயக்கமாக இருந்தது.

நான் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு ஆன் டியூட்டி ஸ்டேஷன் மாஸ்டருக்கு நடந்த சம்பவத்தை பற்றி கூறினேன். ஸ்டேஷன் மாஸ்டரிடம் எழுத்து பூர்வமான ஒரு புகார் கொடுத்துவிட்டு மறுநாள் காலை சிஆர்பிஎப் போலிசிடம் புகார் அளித்தேன். பின்னர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். சாட்சியிடம் புகார் காண்பிக்கப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். தான் சேகர், கருப்பன், பரணி மற்றும் தெரியாத ஒரு நபர் மீது புகார் கொடுத்ததாக கூறுகிறார். **அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தனர். சாட்சியிடம் இவ்வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. அது தன்னுடைய இரயில்வே யூனிபார்ம் என்றும், எனது பணி நேரத்தில் அதை தான் போட்டு கொண்டிருப்பேன். சம்பவத்தன்றும் அந்த யூனிபார்மை தான் போடடு கொண்டிருந்தேன் அதை தான் பிடித்து அடித்தார்கள். **அந்த வழக்கு சொத்து சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

சம்பவம் நடந்த அன்று அம்பேத்கார் பிறந்த நாள் என்பதால் கேட்டிடம் ஊர்வலம் நடந்ததா என்று கேட்டால் அந்த இடத்தில் நடக்கவில்லை அன்றைய தினம் பிறந்த நாள் என்று கூறியிருந்தேன். சம்பவம் நடந்த அன்று கேட்டிற்கு இரண்டு பக்கமும்

பொது மக்கள் நிறைய பேர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

அன்றைய தினம் இரயில் கிராசான பிறகும் கேட்டை திறக்கவில்லையென்று அங்கிருந்த பொது மக்கள் என்னை கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. அங்கிருந்த பொது மக்கள் கேட்டை திறக்கவில்லையென்று பொது மக்கள் கேட்ட போது நான் நல்ல மனநிலையில் இல்லாமல் அவர்களிடம் தவறான வார்த்தைகளால் பேசினேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் மது அருந்தியிருந்ததால் பொது மக்கள் என்னை கேட்டார்கள் என்று சொன்னால் எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. சேகர் என்னை தாக்கியதால் எனக்கு தாங்க முடியாத வலி ஏற்பட்ட போது நான் என்ன செய்தேன் என்று கேட்டால் தண்ணீர் குடித்துவிட்டு ஸ்டேசன் மாஸ்டருக்கு தகவல் தெரிவித்தேன். நான் ஸ்டேஷன் மாஸ்டருக்கு தகவல் தெரிவித்தவுடன் போலிசார் வந்தார்களா என்றால் இரண்டு ஆர்பிஎப் போலிசார் வந்து விவரங்களை கேட்டுவிட்டு சென்று விட்டார்கள். நான் தகவல் கொடுத்த பிறகு தான் இரயில்வே போலிசார் வந்தார்களா என்றால் ஆம்.

தகவல் எவ்வாறு அளித்தேன் என்றால் கேட்டிடம் உள்ள இரயில்வே போனில் தகவல் தெரிவித்தேன் அந்த போனில் ஸ்டேஷன் மாஸ்டருக்கு மட்டும் தான் பேச முடியும். நான் ஸ்டேஷன் மாஸ்டருக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல கொடுத்தேன். நான் சம்பவம் நடந்தவுடன் விடுப்பு எடுத்தோ அல்லது டியூட்டிலிருந்தோ மருத்துவமனைக்கு செல்லவில்லையென்று சொன்னால் சரிதான். நான் டியூட்டி பார்த்துவிட்டு மறு நாள் தான் மருத்துவமனைக்கு சென்றேன். எதிரிகள் என்னை அவ்வாறு தாக்கி எனக்கு தாங்க முடியாத வலி ஏற்பட்டிருந்தால் நான் உடனே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் டியூட்டி பார்த்திருக்க மாட்டேன் என்று சொன்னால் அவர் கையால் தான் அடித்தார் தண்ணீர் குடித்தேன் ஸ்டேஷன் மாஸ்டருக்கு தகவல் அளித்த போது ஓகேவா என்று கேட்டார் ஆம் என்று டியூட்டி பார்த்தேன்.

போலிசார் எதிரிகள் மது அருந்தியதற்கு பயன்படுத்திய பாட்டில் மற்றும் பிற பொருட்களை சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எனது மேலதிகாரிக்கு தகவல் கொடுக்கவில்லையென்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் பொய் சாட்சி அளிப்பதற்கு எதிரிகள் எனக்கு விரோதிகள் கிடையாது. நான் உண்மையை தான் கூறுகிறேன். அதசாஆ 1 புகாரில் தமிழக காவல் துறையினர் அந்த பக்கமாக ரோந்து வந்த போது அந்த

இடத்தில் மது அருந்த கூடாது என்று எதிரிகளை எழுந்து செல்லுமாறு கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், போலிசாரைரே தான் வந்தார்கள் புகார் அளித்து வரவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் ரோந்து பணியில் இருக்கும் போது அங்கு வந்து இங்கு அமர கூடாது என்று எதிரிகளை அனுப்பி வைத்தனர்.

அந்த போலிசார் எந்த காவல் நிலையத்தை சார்ந்தவர்கள் என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் ஒரு அரசாங்க ஊழியர் என்ற கடமையில் எந்த போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டிய பொறுப்புள்ளது என்றால் அவர்கள் போலிஸ் அதிகாரிகள் என்பதால் அவர்களிடம் என்னால் விவரங்களை கேட்க முடியாது. போலிசார் யார் என்று கூறினார் உண்மை தெரிந்து விடும் என்பதால் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது நீதிமன்றத்தில் புகார் அளித்தால் கொன்றுவிடுவதாக கூறினார்கள் என்று குறிப்பிட்டுள்ள விவரத்தை எனது புகார் மற்றும் போலிசார் வாக்குமூலத்தில் கூறவில்லையென்றால் சரிதான். நான் ஸ்டேஷன் மாஸ்டருக்கு போன் மூலமாகவும், எழுத்து பூர்வமாகவும் தகவல் அளித்த விவரத்தை எனது புகாரிலோ, போலிசார் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் கூறியுள்ளேன். சாட்சியிடம் புகாரை காண்பித்து மேற்படி விவரங்கள் உள்ளதா என்று கேட்ட போது இல்லையென்று கூறினார். நான் உண்மையில் புகார் கொடுத்திருந்தால் போலிசார் அங்கு வந்திருப்பார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மை சம்பவத்தை மறைப்பதற்காகவும், இவ்வழக்கை திசை திருப்புவதற்காகவும், பொய்யான புகாரை காவல் நிலையத்தில் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று என்னுடைய பணியில் எந்தவித தாமதமும் ஏற்படவில்லையென்று சொன்னால் பிரச்சனை நடந்தது அதன் பிறகு எனது பணியை நான் சரியாக செய்தேன்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 108/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Tr. Eniyanbu Sakarabani |
| Father/Husband's Name | : Shankar Prasath |
| Village | : No.24/12, Pavallavnir Street |
| Taluk | : Kancheepuram |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2025.

A1, A2, A3 present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து காஞ்சிபுரத்தில் ஸ்டேசன் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2018 அன்று 22.30 மணியளவில் கேட் மேன் கோகுல்தாஸ் அவர்கள் சில நபர்கள் எல்சி 28 கேட்டிடம் பிரச்சனை செய்வதாக கேட் போன் மூலமாக தகவல் தெரிவித்தார். நான் போன் மூலமாக இரயில்வே போலிசாருக்கு தகவல் தெரிவித்தேன். சாட்சியிடம் 15.04.2018 தேதியிட்ட கடிதம் காண்பிக்கப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று கூறுகிறார். மேற்படி ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் எனது போலிசார் விசாரணையில் பொது மக்கள் தான் கோகுல்தாஸை தாக்கியதாக கூறியுள்ளேன் எதிரிகள் தாக்கியதாக கூறவில்லையென்று சொன்னால் எனக்கு அந்த விவரம் தெரியாது. எனக்கு தகவல் கிடைத்த பிறகு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்று கேட்டால் இரயில்வே போலிசாருக்கு தகவல்

அளித்தேன் அவர்கள் மறுநாள் காலை வந்தார்கள். கோகுல்தாஸ் எனக்கு தகவல் எதுவும் தெரிவிக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. போலிசாருக்கு நான் தகவல் தெரிவித்திருந்தால் உடனே போலிசார் அங்கு வந்திருப்பார்கள் என்று சொன்னால் நான் உடனே தான் தகவல் சொன்னேன். நான் எத்தனை மணிக்கு போலிசாருக்கு தகவல் அளித்தேன் என்று கேட்டால் 22.35 மணியிருக்கும். அசா 1 எனக்கு எந்தவிதமான தகவலும் தெரிவிக்கவில்லையென்றாலும், அதன் பேரில் நான் போலிசாருக்கு எந்த தகவலும் அளிக்கவில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.